| | | | |
|---|---|---|---|
| Headline | Tokio Marine - Achievers award event for Indian agents | | |
| MediaTitle | Malaysian Nanban (Sunday) | | |
| Date | 25 Jan 2015 | Language | Tamil |
| Circulation | 60,000 | Readership | 419,000 |
| Section | News | Page No | 10 |
| ArticleSize | 556 cm² | Journalist | NULL |
| PR Value | RM 11,727 | | |
| | | | |



## தோக்கியோ மேரின்

# இந்திய காப்புறுதி முகவர்களின் சாதனையாளர் விழா




(எம்.சின்னப்பன்)



ஜொகூர் பாரு, ஜன. 25-
ஜொகூர் பாருவில் முதல் முறையாக தோக்கியோ மேரின் காப்புறுதி நிறுவனத்தின் ஆறு இந்திய முகவர்களின் நிறுவனங்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த 2014 ஆம் ஆண்டு சாதனையாளர்கள் பரிசளிப்பு விழாவில் பலத்தரப்பட்ட சாதனை விருதுகளுக்கான கேடயங்கள் வழங்கப்பட்டன..



இந்நிகழ்வில் ஆறு இந்திய காப்புறுதி முகவர்களின் நிறுவனங்களான ரூமாஸ் ஏஜென்சி, ராஜூ எசோசியட்ஸ், எஸ்.ஐபாரத் ஏஜென்சி, ஆசியா பிளாட்டினம் ஏஜென்சி, கண்ணா ஏஜென்சி, ஆர்.எம்.ஏஜென்சி ஆகிய நிறுவனங்களின் முகவர்கள், யூனிட் நிர்வாகிகள், ஏஜென்சி நிர்வாகிகள் உட்பட 130 பேர் கலந்து கொண்டனர்.

அண்மையில் இந்த பரிசளிப்பு விழா பூலாய் ஸ்ப்ரிங் ரிசோர்ட்டில் நடைபெற்றது. கோலாலம்பூரைச் சேர்ந்த தோக்கியோ மேரின் காப்புறுதி நிறுவனத்தின் தலைமை ஏஜென்சி அதிகாரி லியூ கிம் வா, சிவகுமார், சிங்கப்பூர் ஜேம்ஸ் சுப்ரா ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டதுடன், நிகழ்வினை லியூ கிம் வா அதிகாரப்பூர்வமாக தொடக்கி வைத்தார்.

பிபாவின் தலைவரான வேலாயுதம் நிகழ்வை திறம்பட வழி நடத்திச் சென்றார். இந்நிகழ்வில் தோக்கியோ மேரின் நீண்டக் கால காப்புறுதி முகவரும், நிகழ்ச்சியின் ஏற்பாட்டுக்குழுத்தலைவருமான எம்.ராஜூக்கு பொன்னாடை சாற்றி கௌரவிக்கப் பட்டது.

இந்த சாதனை பரிசளிப்பு விழாவில் தேசிய ரீதியில் 5ஆவது இடத்தை வகிக்கும் ரூமாஸ் ஏஜென்சியின் முகவர்களின் தலைமை நிர்வாகி எஸ்.ராமசாமி சிறப்பு செய்யப்பட்டதுடன், கேடயமும் வழங்கப்பட்டது.

தேசிய ரீதியில் யூனிட் நிர்வாகியாக முதல் நிலையிலும், எம்.டி. ஆர்.டியாக 16ஆவது முறையாக தேர்வாகிய எம்.ரூமாயி பாராட்டை பெற்றதுடன் கேடயமும் வழங்கப்பட்டது.

எஸ்,ராமசாமி, எம்.ரூமாயி, ஆர்.கதிரேசன், சி.கஸ்தூரி திலகம், டி.அரிவானந்தராஜ், ஆர்.ரூபாவதி, ஜி.புவனேஷ்வரி, ஜி.வெங்கடாசெல்வதி ஆகியோர் பிளாட்டினம் விருதினை பெற்றனர். 2014ஆம் ஆண்டு தங்க விருது ஆர்.மூர்த்தி, பி.வேலாயுதம், எஸ்.சந்திரன், எஸ்.சரஸ்வதி, கே.கலைச் செல்வன், மாரியப்பன், எம்.திலகமலர், ஆர்.விஜயமலர், ஆர்.நிர்மலா, ஆர்.ராசாத்தா, வி.சேகர், ஆர்.ஜோதி, எஸ்.மரியதாஸ் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. மேலும் 2014ஆம் ஆண்டிற்கான வெளிநாட்டு சுற்றுலாவுக்கு எஸ்.ராமசாமி, பி.வேலாயுதம், எம்.ரூமாயி, ஆர்.கதிரேசன், எஸ்.சரஸ்வதி, சி.கஸ்தூரி திலகம், டி.அரிவானந்தராஜ், ஆர்.ரூபாவதி, வி.புவனேஸ்வரி, ஆர்.விஜயமலர், ஜி.வெங்கசெலாவதி ஆகியோர் தேர்வாயினர். இவர்கள் அனைவரும் இம்முறை ஹவாயி செல்கிறார்கள்.

கடந்த 2014ஆம் ஆண்டு, தோக்கியோ மேரின் இந்திய காப்புறுதி முகவர்கள் சேர்ந்த ஆறு நிறுவனங்கள் 87 லட்சம் வெள்ளி வியாபாரத்தை செய்ததாக தெரிவிக்கப்பட்டது.

Powered by: iSENTIA